2024 பிப்ரவரி 19] [திரு. தங்கம் தென்னரசு]

நிதியாண்டில் 3,123 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–40

62. 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தொலைநோக்குடன் விதைக்கப்பட்ட சுயஉதவிக் குழுத் திட்டம், இன்று நாடெங்கும் கோடிக்கணக்கான மகளிரின் வாழ்க்கையில் ஒளியேற்றும் இயக்கமாக உருவெடுத்துள்ளது. மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்றி சமூகத்தில் பெண்களுக்கு உரிய பங்கினை வழங்கிடும் நோக்கில் அவர்களின் வளர்ச்சிக்கும், திறன் மேம்பாட்டிற்கும் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. இதுவரை, சுயஉதவிக் குழு இயக்கத்தில் இணைந்திடாத மகளிர் மற்றும் விளிம்புநிலை வாழ் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு, 10,000 புதிய சுயஉதவிக் குழுக்கள் வரும் நிதியாண்டில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வரும் நிதியாண்டில் 35,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

63. தமிழ்நாட்டின் முத்திரை பதிக்கும் திட்டங்களில் ஒன்றான 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகள் தாம்பரம், திருச்சிராப்பள்ளி, கூடுவாஞ்சேரி உள்ளிட்ட 10 இடங்களில் 1,145 மகளிர் பயன்பெறும் வகையில் 35 கோடி ரூபாயில் அனைத்து நவீன வசதிகளுடன் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. சென்னை, திருவண்ணாமலை, ஓசூர் ஆகிய நகரங்களில், 432 பெண்கள் பயன்பெறும் வகையில், 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய 'தோழி' விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தொடர்ந்து, வரும் நிதியாண்டில், சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய முக்கிய நகரங்களில் 345 மகளிர் பயன்பெறும் வகையில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய 'தோழி' விடுதிகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

64. மூன்றாம் பாலினத்தவரின் நல்வாழ்வுக்கென பல்வேறு புதுமையான திட்டங்களை நாட்டிலேயே முன்னோடியாக தமிழ்நாடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. மூன்றாம் பாலினத்தவரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டினை

[திரு. தங்கம் தென்னரசு] [2024 பிப்ரவரி 19

உறுதிசெய்து, வாழ்க்கையில் வெற்றிபெற அவர்கள் உயர் கல்வி கற்பது மிகவும் இன்றியமையாததாகும். எனினும், தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மூன்றாம் பாலினத்தவர் மட்டுமே தமிழ்நாட்டில் உயர் கல்வி பயின்று வருகின்றனர். எனவே, உயர் கல்வியைத் தொடர விரும்பும் மூன்றாம் பாலினத்தவரின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவுகளையும் அரசே ஏற்கும். (மேசையைத் தட்டும் ஒலி) திருநங்கைகள் நல வாரியம்மூலம் நடைமுறைப்படுத்தவிருக்கும் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் கூடுதலாக அரசால் வழங்கப்படும்.

65. அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றை திறம்படச் செயல்படுத்தவும் அதன் நிர்வாகத்தை மேம்படுத்தவும் உரிய ஆலோசனைகள் வழங்கிட அமைக்கப்பட்ட மேனாள் நீதியரசர் திரு. கே. சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இத்துறையில் உரிய சீர்திருத்தங்களை மேற்கொள்வது என இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதுவரை சமூகப் பாதுகாப்புத் துறை என்ற பெயரில் இயங்கி வந்த இந்தத் துறை, இனி "குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை" என பெயர் மாற்றம் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தலைமைப் பாதுகாப்பு அலுவலர் உள்ளிட்ட புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, துறையின் மனிதவள மேலாண்மை உறுதி செய்யப்படும்.

66. மேலும், முதற்கட்டமாக கோயம்புத்தூரில் குழந்தைகளுக்கான திறன்பயிற்சிக் கூடம், ஆலோசனை அறைகள், நூலகம், குடும்பப் பார்வையாளர்கள் அறை, மருத்துவப் பரிசோதனை அறை, பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய வசதிகளுடன்கூடிய ஒரு மாதிரி இல்லம் பூஞ்சோலை என்ற பெயரில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு 7,830 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**பள்ளிக் கல்வி**

67. "கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். கல்வி முன்னேற்றத்தை